[1975 அக்டோபர் 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது வேலூரில் இருக்கும் கட்டடங்களைப் புதுப்பிப்பதைவிட அலமாதியில் இருக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது என்று அரசு உணர்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றுவதற்கு இயலாது.

அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர் விடுதி

*107 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்கள் விடுதி ஒன்று அமைக்க அரசு 9—6—1975 அன்று உத்தரவு பிறப்பித்து, 20—8—1975 முதல் அது செயல்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அரசு, அரிசன நலத் துறையின் மூலம் மூன்றரை இலட்ச ரூபாய் செலவில் அரிசன மாணவர் விடுதி ஒன்று கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. அதில் ஏறத்தாழ 200 மாணவர்கள் தங்கிப் பயில வசதி இருக்கிறது. அதிலேயே பின்தங்கிய மாணவர்களும் கணிசமான எண்ணிக்கையில் தங்கிப் பயில வசதி இருக்கிறது. ஆகவே, விடுதி இல்லாத எலப்பாக்கம், உலத்தி போன்ற பகுதிகளில் பின்தங்கியோர் மாணவர் விடுதியை அமைக்க அரசு உதவி புரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான விடுதி அமைப்பது என்று அரசு ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் அதை மாற்ற முடியாது. உலத்தி, எலப்பாக்கம் போன்ற இடங்களில் தேவைப்பட்டால் பின்தங்கிய மாணவர் விடுதி வேறு அமைப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம்.

1975 அக்டோபர் 29]

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மதுராந்தகம் வட்டத்தில் 30 உயர்நிலைப்பள்ளிகளுக்கு மேல் இருக்கின்றன. ஆனால், தாலுக்கா தலைநகரமாகிய மதுராந்தகத்தில் பின்தங்கிய மாணவர் விடுதி இல்லை. அதை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேவைகளை உணர்ந்து இப்படிப்பட்ட விடுதிகள் அமைக்கக்கூடிய அடிப்படைகள் அமையுமானால், அரசு அவைகளைப் பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நம்முடைய அரசாங்கம் அரிசனங்களுக்குரிய வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் முப்பதாயிரம் வீடுகளுக்கு மேல் கட்டிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கழகத்தின் மூலமாகவே, அரிசன மாணவர்களுக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கும் ஆங்காங்கு வேண்டிய ஹாஸ்டல் வசதி செய்துகொடுக்க நம்முடைய அரசு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா ? அப்படியானால் எந்த எந்த இடங்களில் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் வீடு கட்டுவது மாத்திரமல்லாமல், 143 அரிசன மாணவர் விடுதிகள் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது 98 இடங்களில் அந்த வேலைகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. அ. ஆறுமுகம்: சில இடங்களில் வாடகைக் கட்டடத்தில் மாணவர் விடுதிகள் இருக்கின்றன. அவை மிகவும் பாழடைந்து சில இடங்களில் இருக்கின்றன. அப்படிப்பட்டவற்றில் உடனடியாகக் கவனம் செலுத்தி, புதிதாக அங்கே மாணவர் விடுதிகளைக் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 249 இல்லங்களும், அரிசன மாணவர்களுக்கு 566 இல்லங்களும், பழங்குடி மாணவர்களுக்கு 15 இல்லங்களும், ஆக 830 இல்லங்கள் இருக்கின்றன. இந்த 830 இல்லங்களுக்கும் உடனடியாக கட்டடங்கள் அமைப்பது இயலாத காரியம். இப்பொழுதுதான் கட்டடம் அமைக்க நாம் தொடங்கி, 20 சதவீதத்திற்கு மேல் கட்டடங்களை நாம் கட்டி வருகிறோம். மீதி 80 சதவீத இடங்கள் வாடகை இடத்தில்

இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் கட்டடம் கட்டி மாற்றும் முயற்சியை, நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

மாநிலக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*108 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் எந்தெந்த பட்ட மேற்படிப்பு பாடங்களில் மாலைநேர வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செயற்குறிப்பு எதுவும் இல்லை.

கும்பகோணம் கலைக் கல்லூரி

*109 வினா—திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் 1975–76 ஆம் ஆண்டு முதல் Chemistry M. Sc., வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. செ. அரங்கநாயகம்: எம்.எஸ்ஸி. வகுப்பு தொடங்குவதற்கு கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் ஏன் மேல் பட்டப்படிப்பைத் தொடங்க அரசு தயங்குகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மேல் பட்டப்படிப்பைக் கொண்டுவரும் தன்மையில் அது எந்தெந்தத் துறைக்குத் தேவையோ அந்தத் துறையை எந்தெந்த இடங்களில் அதற்கான வசதி வாய்ப்புகள் செய்ய முடியுமோ அந்த அளவுக்குதான் செய்ய முன்வர இயலும். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ஐந்து இடங்களில்தான்